DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 129/2025

Prosecution PW 1

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | கவிதா |
| Father's Name | : | சேகர் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 09.03.2026.

**எதிரி நீதிமன்ற காவலிலிருந்து பி.டி. வாரண்ட் மூலமாக நேரில் ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது மயிலாடுதுறையில் வசித்து வருகிறேன். 2022ம் வருடம் கோயம்புத்தூரிலுள்ள வேலை வாய்ப்பு மண்டல இணை இயக்குநர் அலுவலகத்தில் Record Clerk ஆக பணிபுரிந்து வந்தேன். கோயம்புத்தூர் ஹவுசிங்

யுனிட்டில் தங்கி வேலை பார்த்து வந்தேன். 09.01.2023ம் தேதி மங்களூர் செல்லும் ரயிலில் திருச்சியில் ரிசர்வேசன் கோச்சில் காலை 05.00 மணியளவில் ஏறி கோயம்புத்தூர் செல்வதற்காக சென்றேன். என்னுடைய ரிசர்வேசன் கோச்சில் பர்த்தில் பேக்கில் 2 பவுன் டாலர் ஒன்று, பேங்க் பாஸ் புக், ஐடி கார்டு, நகை வைத்ததற்கான ரசீது ஆகியவற்றை என்னுடைய ரோஸ் கலர் பேக்கில் வைத்திருந்தேன். நான் சிறிது நேரம் கண் அயந்து தூங்கினேன். ரயில் ஈரோடு நிலையம் சென்றபோது தெரிய வந்து டிடிஆர் இடம் நான் பேக் அதில் வைத்திருந்த நகை இதர ஆவணங்களை காணவில்லை என கூறினேன். பின்னர், டிடிஆர் உடன் ஈரோடு ரயில் நிலையத்தில் இறங்கி ஈரோடு ரயில் நிலைய இருப்பு காவல் பிரிவில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது. **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. ஈரோடு ரயில் நிலைய இருப்பு போலிசார் என்னை விசாரித்தனர். பின்னர் 2 நாட்கள் கழித்து ஒரு நபர் என்னுடைய ரோஸ் கலர் ஹேண்ட் பேக், எடுத்து செல்லும் நபர் கரூர் ரயில் நிலையத்தில் இருந்து இறங்கி சென்ற நபரின் போட்டோவை காண்பித்தனர். அந்த போட்டோவிலுள்ள நபர் என்னுடைய கோச்சில் என்னிடம் பேசிக் கொண்டிருந்த நபர் என தெரிய வந்தது. அந்த நபர் ஆஜர் எதிரிதான். ஆஜர் எதிரி பேக்கை எடுத்து செல்லும் புகைப்படங்கள் பதிவுகளை நான் பார்த்தேன். பின்னர் நகையை எதிரியிடமிருந்து கைப்பற்றினர். அதை நான் நீதிமன்றத்தின் மூலம் மனு தாக்கல் செய்து பெற்றுக் கொண்டேன். என்னிடம் காட்டப்படும் போட்டோவிலுள்ள டாலர் என்னுடையது. **அந்த போட்டோ அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை ( எதிரி தரப்பில்)**

எதிரிதான் எனது பையை திருடினார் என்று போலிசார் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். எதிரி பையை எடுக்கும்போது நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் பயணம் செய்த கோச்சில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் நான் மட்டும்தான் இருந்தேன். எதிரி எந்த நிறுத்தத்தில் ஏறினார் என்று எனக்கு தெரியாது. ஈரோட்டில்தான் அவரை பார்த்தேன். போலிசார் என்னை புகார் கொடுத்த அன்றே விசாரித்தார்கள். என்னை போலிசார் விசாரித்தது ஈரோடு இருப்புப் பாதை காவல் நிலையம் என்றால் சரிதான். போலிசார் நான் புகார் கொடுத்த அன்று மட்டுமே என்னை விசாரித்தார்கள். நான் கொடுத்த புகாரில் என்னுடன் அலுவலகத்தில் வேலை செய்பவர்கள் சாட்சி கையொப்பம் செய்தார்கள். எதிரி எந்த தவறும் செய்யவில்லை என்றாலும், போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஓம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 129/2025

Prosecution PW 2

Deposition of Witness for Defence

Court

Name : வீரமணி

Father's Name : கண்ணன்

Village :

Taluk :

District :

Age :

Calling :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 09.03.2026.

**எதிரி நீதிமன்ற காவலிலிருந்து பி.டி. வாரண்ட் மூலமாக நேரில் ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் தஞ்சாவூரில் குடியிருந்து தெற்கு ரயில்வேயில் முதன்மை டிக்கெட் பரிசோதகராக பணிபுரிந்து வருகிறேன். 2023 ம் வருடம் நான் திருச்சியில் உதவி டிக்கெட் பரிசோதகராக பணிபுரிந்து வந்தேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும்.

09.01.2023ம் தேதி ரயில் எண்.16160 என்ற சென்னை எலும்பூரிலிருந்து மங்களூர் செல்லும் விரைவு வண்டியில் எனக்கு திருச்சிராப்பள்ளியிலிருந்து பாலக்காடு வரை டிக்கெட் பரிசோதனை செய்யும் பணியில் இருந்தேன். திருச்சியில் விடியற்காலை சுமார் 04.50 மணியளவில் ரயில் கிளம்பியது. அ.சா.1 எஸ்2 கோச் 33 பர்த்தில் பயணம் செய்து வந்தார். காலை சுமார் 07.10 மணியளவில் கரூரிலிருந்து ஈரோட்டுக்கு ரயில் சென்றுகொண்டிருந்தபோது, அ.சா.1 என்னிடம் ஹேண்ட் பேக், கட்டைப்பை காணவில்லை என்றும், ஹேண்ட் பேக் ரோஸ் கலர் என்றும், அதில் ஒரு 2 சவரன் தங்க டாலர் ஒன்றும், வீட்டு சாவி, நகை அடகு வைத்ததற்கான ரசீது ஆகியவைகள் இருந்ததாகவும், அவற்றை காணவில்லை என்றும் கூறினார். நான் உடனடியாக போலிஸ் கண்ட்ரோல் ரூமுக்கு தகவல் சொன்னேன்ன. ஈரோடு ரயில் நிலையத்தில் புகார் கொடுக்க அறிவுறுத்தினேன். பின்னர் 10 நாட்கள் கழித்து அ.சா.1 எனக்க போன் மூலம் கரூர் ரயில் நிலையத்திலுள்ள சிசிடிவி புட்டேஜை பார்த்ததாகவும், ஒரு நபர் அ.சா.1ன் ரோஸ் கலர் ஹேண்ட் பேக் மற்றும் கட்டை பையை எடுத்து செல்வதை சிசிடிவி புட்டேஜை பார்த்து அடையாளம் காட்டியதகாவும் சொன்னார். இருப்புப் பாதை போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை ( எதிரி தரப்பில்)**

எஸ்2 கோச்சுக்கு நான்தான் டிக்கெட் பரிசோதகர் என்றால் சரிதான். அந்த கோச்சில் முன் பதிவு செய்தவர்கள் மட்டும்தான் ஏற முடியும் என்றால் சரிதான். அவ்வாறு முன் பதிவு செய்யாதவர்கள் ஏறினால் அவர்களுக்கு பெனால்டி போட்டு விடுவோம் என்றாலும், அவர்களை அடுத்த நிறுத்தத்தில் இறக்கிவிட்டு விடுவோம் என்றாலும் சரிதான். சம்பவ தினத்தன்று அவ்வாறு யாரையாவது பெனால்டி போட்டு இறக்கிவிட்டேனா என்றால் இல்லை. நான் 4 கோச் மட்டும்தான் பார்த்தேன். நான் கண்காணிக்கும் கோச்சில் சட்ட விரோதமாக யாரும் செல்ல முடியாது என்றால் சரிதான். ஆஜர் எதிரியை நான் கோச்சில் பார்க்கவில்லை என்றால் சரிதான். காலை 04.50 மணிக்கு டியூட்டி ஆரம்பமாகி

மாலை 02.00 பாலக்காடு செல்லும் வரை நான் டியூட்டியில் இருந்தேன். புகார்தாரர் புகார் கொடுக்கும்போது நான் உடன் செல்லவில்லை என்றால் சரிதான். போலிசார் சம்பவம் நடைபெற்று 1 மாதம் கழித்து என்னை விசாரித்தனர். அந்த விசாரணையை என்னிடம் போன் மூலம்தான் நடத்தினார்கள், என்னை நேரில் விசாரிக்கவில்லை. என்னை விசாரித்தவர் பெயர் சார்பாய்வாளர் கண்ணன் என்பவர் ஆகும். புகார்தாரர் சொல்லித்தான் சம்பவத்தை பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். போலிசார் என்னை போன் மூலமாகவும் விசாரிக்கவிபல்லை என்றாலும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./—எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 129/2025

Prosecution PW 3

Deposition of Witness for Defence

Court

Name : முருகானந்தன்

Father's Name : ராஜு

Village :

Taluk :

District :

Age :

Calling :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 09.03.2026.

**எதிரி நீதிமன்ற காவலிலிருந்து பி.டி. வாரண்ட் மூலமாக நேரில் ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் ஈரோட்டில் குடியிருந்து வருகிறேன். ஈரோடு இருப்புப்பாதை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். 09.01.2023 ம் தேதி மாலை 17.15 மணியளவில் நான் நிலைய அலுவலில்

இருந்தபோது கவிதா என்பவர் நிலையம் ஆஜராகி அவர் சொந்த வேலையின் காரணமாக திருச்சி சென்றுவிட்டு, 09.01.2023ம் தேதி காலை ரயில் வண்டி எண் 16159 எக்மோரிலிருந்து மங்களூர் செல்லும் விரைவு வண்டியில் திருச்சியிலிருந்து டிக்கெட் முன்பதிவு செய்த எஸ்2 கோச் 33 பர்த் சீட்டில் பயணம் செய்து வந்ததாகவும், அசதியில் 06.00 மணியளவில் தூங்கிவிட்டதாகவும, அதன் பின்னர் 07.00 மணியளவில் தான் எழுந்து தனது படுக்கைக்கு கீழ் வைத்திருந்த ரோஸ் கலர் ஹேண்ட்பேக்கை பார்த்தபோது, அந்த இடத்தில் இல்லை என்றும், யாரோ திருடி சென்றுவிட்டதாகவும், அந்த ஹேண்ட்பேக்கில் 2 பவுன் எடையுள்ள டாலர் ஒன்று, நகை அடகு வைத்த ரசீது நான்கும் மற்றும் வீட்டின் சாவிகள் அதிலிருந்ததாகவும் மேற்கண்ட பொருட்கள் அனைத்தும் யாரோ திருடி சென்றுவிட்டதாக கொடுத்த புகாரினை பெற்று ஈரோடு இருப்புப்பாதை காவல் நிலைய கு.எண். 9/2023, ச.பி. 379 இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. புகார் கொடுத்தவரிடம் விவரங்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பின்னர், இந்த வழக்கு சம்மந்தமாக குற்றவாளியை கண்டுபிடிக்க வேண்டி 2 குற்ற பிரிவு காவலர்கள் 1. த.கா. 144 திரு.கண்ணன், 2. மு.நி.கா. 704 திரு.ஜெயவேல் ஆகியோரை தனி அலுவலாக நியமித்து அன்றைய தினமே ஈரோடு இருப்புப்பாதை காவல் நிலையத்திலுள்ள சிசிடிவி புட்டேஜ்களை ஆய்வு செய்தும், அதன் பின்னர் 10ம் தேதி மேற்படி குற்றப் பிரிவு காவலர்கள் கொடுமுடி ரயில் நிலையம், கரூர் ரயில் நிலையம் ஆகிய இடங்களில் சந்தேக நபர்களை விசாரிக்கவும், குற்றம் குறித்து விசாரிக்கவும் நியமித்தேன். அதன் பின்ன மேற்படி காவலர்கள் இருவரும் கரூர் இருப்புப்பாதை காவல் நிலையம் மற்றும் ஆர்பிஎப் காவல் நிலையத்திலும் விசாரித்தும் அங்கு பொருத்தப்பட்டிருநத் சிசிடிவி புட்டேஜ்களை பார்வையிட்டனர். அதில் புகார்தாரர் பயணம் செய்த பெட்டியிலிருந்து ஒரு நபர் அவர் கூறிய ஹேண்ட்பேக்குடன்

கரூர் ரயில் நிலையத்திலிருந்து வெளியே செல்வதை கரூர் ரயில் நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவியிலிருந்து பதிவுகளை நகல் எடுத்தும் உதவி ஆய்வாளர் என்னிடம் அறிக்கை தாக்கல் செய்தனர்.

3. என்னிடம் காட்டப்படும் போட்டோக்கள் கரூர் ரயில் நிலையத்தில் உள்ள சிசிடிவி புட்டேஜிலிருந்து எடுக்கப்பட் புகைப்படங்களை என்னிடம் தனி அலுவலர்கள் காண்பித்தனர். அந்த புகைப்படத்தில் ஒரு நபர் ஹேண்ட்பேக் மற்றும் ரோஸ்கலர் பேக்குடன் வெளியேறுவதை நான் பார்த்தேன். **அந்த புகைப்படங்கள் அ.சா.ஆ.3,4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன் பின்னர் சம்பவமானது திருச்சி ரயில்வே மாவட்டம் கரூர் இருப்புப்பாதை காவல் நிலைய எல்லைக்குட்பட்டு இருப்பதால் விவரத்தை ஈரோடு ஜேஎம் எண்2 அவர்களுக்கு அறிக்கையாக சமர்ப்பித்து இந்த வழக்கை கரூர் இருப்புப்பாதை காவல் நிலையத்திற்கு மாறுதல் செய்ய வேண்டி அறிக்கை சமர்ப்பித்தேன். கரூர் இருப்புப்பாதை போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை ( எதிரி தரப்பில்)**

**குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பில் கால அவகாசம் கோரியதால் உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி விசாரணை முடிக்கப்பட்டது.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 129/2025

Prosecution PW4

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | நீத்தாமோல் |
| Father's Name | : | பாபுராஜன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 09.03.2026.

**எதிரி நீதிமன்ற காவலிலிருந்து பி.டி. வாரண்ட் மூலமாக நேரில் ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் கரூர் ரயில்வே பாதுகாப்பு படை பிரிவில் பெண் காவலராக பணிபுரிந்து வருகிறேன். 13.01.2023ம் தேதி அன்று நான் பணியிலிருந்தபோது, ஈரோடு இருப்புப்பாதை காவல் பிரிவிலிருந்து 3 காவலர்கள் ( Police Staff ) கரூர் ரயில்வே

பாதுகாப்பு படை அலுவகத்திற்கு வந்து 16159 எக்மோரிலிருந்து மங்களூர் செல்லும் ரயிலில் கரூர் நிலையத்திற்கு வந்த நேரம் காலை 06.20– புறப்படும் நேரம் காலை 06.30 வரை கரூர் ரயில் நிலையத்தில் பதிவான சிசிடிவி புட்டேஜுகளை கேட்டார்கள். நான் உயர் அதிகாரியிடம் அனுமதி பெற்று சிசிடிவி புட்டேஜை ஆய்வு செய்தேன். அந்த ரயில் பிளார்ட்பார்ம் எண்.1ல் நின்ற பிறகு ரயிலில் எஸ்2 கோச் குறித்து சிசிடிவி புட்டேஜை ஆய்வு செய்தபோது, ஈரோடு இருப்புப்பாதை காவலர்கள் கூறியதன் அடிப்படையில் ரோஸ் கலர் ஹேண்ட்பேக்கை எடுத்து செல்லும் நபர் குறித்து மேல் அதிகாரியிடம் அனுமதி பெற்று சிசிடிவியில் பதிவாகியிருந்த அந்த நபரின் உருவத்தை செல்போன் மூலம் படம் எடுத்துக் கொண்டும், பென் டிரைவர் மூலம் காப்பியும் பதிவு செய்து கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.3,4 போட்டோக்கள் கரூர் ரயில் நிலையத்தில் பாதுகாப்பு படை கட்டுப்பாட்டிலுள்ள சிசிடிவி புட்டேஜிலிருந்து எடுத்துக் கொடுக்கப்பட்ட புகைப்படங்கள் ஆகும். இருப்புப்பாதை போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை ( எதிரி தரப்பில்)**

சிசிடிவி புட்டேஜுகளை பார்ப்பதற்கு ஈரோடு இருப்புப்பாதை காவலர்கள் 3 பேர் கடிதம் மூலம் அனுமதி கேட்டார்கள். நான் எனது உயர் அதிகாரியிடம் அந்த கடிதத்தை காண்பித்தேன். அந்த உயர் அதிகாரியின் பெயர் ஆர்.கே.முரளி கிருஷ்ணா ஆகும். அவர் கரூர் இருப்புப்பாதை சார்பாய்வாளர் ஆவார். அவரின் உத்தரவின் பேரில்தான் சிசிடிவி புட்டேஜ் எடுக்கப்பட்டது. பென் டிரைவ் என்ன கம்பெனி என்றால் எனக்கு ஞாபகமில்லை. அந்த பென் டிரைவ் எத்தனை ஜிபி என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் எந்த பென் டிரைவும் காப்பி செய்து கொடுக்கவில்லை என்றாலும், அதனால்தான் எனக்கு எத்தனை ஜிபி என்றும், எந்த கம்பெனி என்றும் ஞாபகமில்லை என்றாலும் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட அ.சா.ஆ.3ல் ஒரு போட்டோவில் மட்டும் தேதி மாதம், வருடம் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். போட்டோவில் நபரின் ஒரு பக்கம்

மட்டும் தெரிகிறது, முகம் தெரியவில்லை என்றால் சரிதான். போட்டோக்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றாலும், உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஓம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**